**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE SUBORDINATE COURT, AVINASHI**

**MCOP - 31/2018**

**RW – 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அருண் பிரசாத் | | : |
| **Company Name** | : Cholamandalam MS General insurance | | : |
| **Village** | : | **Calling** | : |
| **Taluk** | : | **Age** | : /2024 |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 24th day of October 2024)**

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 3–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் Territory incharge ஆக பணிபுரிந்து வருகிறேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதில் உள்ள சங்கதிகள் அனைத்தையும் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்கிறேன்.

1. குற்ற அறிக்கையின் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.1
2. வரைபடம் போலீஸ் சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2

## குறுக்கு விசாரணை

1. காரை ஓட்டிவந்த ஓட்டுநர் 1–ம் எதிர்மனுதாரக்கு விபத்து ஏற்பட்ட சமயத்தில் முறையான ஓட்டுநர் உரிமம் உண்டு என்றால் சரிதான். இந்த விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை ஆனது 1–ம் எதிர்மனுதாரர் மீது தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் விபத்து நடந்த இடத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான், ஆவணங்களின் அடிப்படையில் நான் சாட்சியமளிக்கிறேன். விபத்து நடந்த இடமானது ஒரு வளைவான பகுதி என்றால் சரிதான். அந்தவளைவான பகுதியில் ரோட்டில் இடதுபுறத்தில் சென்று கொண்டிருந்த இருசக்கர வாகனத்தை முந்தி செல்லும்போது காரின் இடதுபக்கம் இருசக்கர வாகனத்தின் மீது உரசிதான் விபத்து ஏற்பட்டுள்ளது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் சரிதான், இருசக்கர வாகனம் வலதுபுறமாக ஏறி வந்ததால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது.

2. இந்த விபத்திற்கு முழு காரணம் காரின் ஓட்டுநரான 1–ம் எதிர்மனுதாரர் தான் காரணம் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடமும் சரியானது தான் என்றும், ஆனால் போலீசார் இந்த விபத்தானது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த மனுதாரரின் தவறுகையால் தான் விபத்து ஏற்பட்டதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. அந்த இறுதி அறிக்கையானது நஷ்ட ஈடு வழக்கை கட்டுப்படுத்தாது

என்றால் சரியல்ல. அதனால் மனுதாரருக்கு 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/-C.Senthil Kumar**
**Subordinate Judge,**
**Avinashi.**